மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDARM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

Double-Blind Peer-Reviewed | Open Access

E-ISSN: 3049-3676 (ONLINE)

Bimonthly | Online Publication | Tamil Language

Published: 23.10.2026

Volume 10 | Issue 10 | September – October 2026

Female Characters in Uma Maheswari's Short Stories

Mrs. C. Jayanthi

Part-Time Ph.D. Research Scholar, Department of Tamil

RVS College of Arts and Science Sulur, Coimbatore – 641 402,

Tamil Nadu, India.

Research Supervisor Dr. V. Chitra

Associate Professor, Department of Tamil

RVS College of Arts and Science Sulur, Coimbatore – 641 402,

Tamil Nadu, India.

Chitra.v@rvsgroup.com , 9894606369

Abstract

This study examines the characteristics of female characters in Uma Maheswari's short stories and the life-related ideas conveyed through them. It explores how women's inner emotions, family relationships, love, sacrifice, compassion, selfishness, harsh attitudes, and superstitions are portrayed through her female characters. On this basis, the characters are classified and analysed according to their personality traits and behavioural patterns. The female characters exhibiting negative traits include Rathnamma in the short story *Manarkumizhu* and the mother-in-law in *Kanatha Simizh*. Rathnamma's behaviour, in which she humiliates her widowed daughter-in-law by attributing her husband's death to the latter's horoscope, highlights the adverse effects of superstition on women's lives. Similarly, the condition imposed by the mother-in-law in *Kanatha Simizh* illustrates how family authority and oppressive attitudes can adversely affect a daughter-in-law's right to live with dignity and her psychological well-being. The female characters exhibiting positive traits include Sudha in *Murivu*, Avanthika in *Violet Jannal*, and Amrutha in *Amrutha*. Sudha's decision to give her jewellery to support her younger sisters' marriages, despite her parental family's financial difficulties, demonstrates her affection for her siblings and her spirit of sacrifice. Avanthika's act of engaging affectionately with another child to help a mother who is struggling to care for her infant reveals empathy, emotional maturity, and humaneness. Amrutha's act of breastfeeding another hungry child illustrates that motherhood can transcend biological relationships and find expression through love, compassion, and concern for others. The study reveals that Uma Maheswari's female characters are not merely expressions of individual personality traits but also reflections of familial and social circumstances. Characters with negative traits expose superstition, authoritarian attitudes within families, the oppression of women, and complexities in human relationships. In contrast, characters with positive traits emphasise the values of love, sacrifice, compassion, empathy, and humanity. Thus, Uma Maheswari's short stories make a significant literary contribution by portraying women's inner emotional worlds, the complexities of family relationships, and the broader realities of social life with considerable sensitivity and depth.

Keywords: Uma Maheswari, Short Stories, Female Characters, Positive Traits, Negative Traits, Family Relationships, Women's Emotions, Superstition, Sacrifice, Humanism.

உமா மகேஸ்வரி சிறுகதைகளில் பெண் கதாபாத்திரங்கள்

திருமதி ச. ஜெயந்தி
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை ,
ஆர்.வி.எஸ் கலை அறிவியல் கல்லூரி
சூலூர், கோவை 641 402.

நெறியாளர் முனைவர் வா. சித்ரா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஆர்.வி.எஸ் கலை அறிவியல் கல்லூரி,
சூலூர், கோவை 641 402

ஆய்வுச் சுருக்கம்

உமா மகேஸ்வரியின் சிறுகதைகளில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்களின் தன்மைகளையும், அவற்றின் வழியாக வெளிப்படும் வாழ்வியல் சிந்தனைகளையும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது. பெண்ணின் அக உணர்வுகள், குடும்ப உறவுகளின் இயல்புகள், அன்பு, தியாகம், இரக்கம், சுயநலம், கடுமையான மனப்போக்கு, மூடநம்பிக்கை ஆகிய கூறுகள் அவரது பெண் கதாபாத்திரங்களின் வழியாக எவ்வாறு வெளிப்படுகின்றன என்பது இவ்வாய்வில் ஆராயப்படுகிறது. இதன் அடிப்படையில், பெண் கதாபாத்திரங்கள் அவற்றின் குணநலன்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

எதிர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரங்களாக, *மணற்குமிழ்* சிறுகதையில் இடம்பெறும் ரத்னம்மாவும் *காணாத சிமிழ்*

சிறுகதையில் இடம்பெறும் மாமியாரும் ஆராயப்படுகின்றனர். கணவனை இழந்த மருமகளின் துயரத்தைப் புரிந்துகொள்ளாமல், அவளது ஜாதகத்தைக் காரணமாகக் கூறி இழிவுபடுத்தும் ரத்னம்மாவின் செயல்பாடு, மூடநம்பிக்கைகள் பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்புகளை வெளிப்படுத்துகிறது. அதேபோன்று, *காணாத சிமிழ்* சிறுகதையில் மாமியார் விதிக்கும் நிபந்தனை, குடும்ப அதிகாரப் போக்கினால் மருமகளின் வாழ்வுரிமையும் மனநலமும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

நேர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரங்களாக, *முறிவு* சிறுகதையின் சுதா, *வயலட் ஜன்னல்* சிறுகதையின் அவந்திகா, *அம்ருதா* சிறுகதையின் அம்ருதா ஆகியோர் ஆராயப்படுகின்றனர். பிறந்த வீட்டின் பொருளாதார நெருக்கடியை உணர்ந்து, தங்கைகளின் திருமணத்திற்காகத் தனது நகைகளை வழங்கும் சுதாவின் செயல், உடன்பிறப்புகளின் மீதான அன்பையும் தியாக உணர்வையும் புலப்படுத்துகிறது. கைக்குழந்தையைக் கவனித்துக்கொள்வதில் சிரமப்படும் தாய்க்கு உதவும் வகையில், அவளது மற்றொரு குழந்தையுடன் அன்பாகப் பழகும் அவந்திகாவின் செயல்பாடு, பிறரது சூழலைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவத்தையும் மனிதநேயத்தையும் வெளிப்படுத்துகிறது. தாய்ப்பாலுக்காக ஏங்கும் மற்றொரு குழந்தையின் பசியைப் போக்கும் அம்ருதா, தாய்மை என்பது உயிரியல் உறவைத் தாண்டி அன்பு மற்றும் பரிவின் அடிப்படையிலும் வெளிப்படக்கூடியது என்பதை உணர்த்துகிறாள்.

இவ்வாய்வின் அடிப்படையில், உமா மகேஸ்வரியின் பெண் கதாபாத்திரங்கள் தனிமனிதப் பண்புகளின் வெளிப்பாடுகளாக மட்டுமன்றி, குடும்ப மற்றும் சமூகச் சூழல்களின் பிரதிபலிப்புகளாகவும் அமைகின்றன என்பது புலப்படுகிறது. எதிர்மறைப் பண்புகள் கொண்ட கதாபாத்திரங்கள் மூடநம்பிக்கை,

குடும்ப அதிகாரம், பெண்களின் மீதான ஒடுக்குமுறை மற்றும் உறவுச் சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன. நேர்மறைப் பண்புகள் கொண்ட கதாபாத்திரங்கள் அன்பு, தியாகம், இரக்கம், பரிவு, மனிதநேயம் ஆகியவற்றின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. இவ்வகையில், பெண்ணின் அக உணர்வுகளையும் குடும்ப உறவுகளின் சிக்கல்களையும் சமூக வாழ்வியலையும் நுட்பமாகப் பதிவுசெய்வதில் உமா மகேஸ்வரியின் சிறுகதைகள் குறிப்பிடத்தக்க இலக்கியப் பங்களிப்பை வழங்குகின்றன.

திறவுச் சொற்கள்

உமா மகேஸ்வரி, சிறுகதைகள், பெண் கதாபாத்திரங்கள், நேர்மறைப் பண்புகள், எதிர்மறைப் பண்புகள், குடும்ப உறவுகள், பெண்களின் உணர்வுகள், மூடநம்பிக்கை, தியாகம், மனிதநேயம்.

முன்னுரை

சிறுகதை இலக்கியத்தில் பாத்திரப்படைப்பு என்பது கதையின் கருப்பொருளையும் படைப்பாளரின் வாழ்வியல் நோக்கையும் வெளிப்படுத்தும் முதன்மையான இலக்கியக் கூறாகும். குறிப்பாக, பெண் கதாபாத்திரங்களின் வழியாகப் பெண்களின் அக உணர்வுகள், குடும்ப உறவுகள், சமூகச் சிக்கல்கள், அன்பு, தியாகம், இரக்கம் மற்றும் ஒடுக்குமுறைகள் ஆகியவற்றைப் படைப்பாளர்கள் நுட்பமாக வெளிப்படுத்துகின்றனர். இவ்வகையில், உமா மகேஸ்வரியின் சிறுகதைகள் பெண்களின் உணர்வுலகையும் வாழ்வியல் அனுபவங்களையும் ஆழமாகப் பதிவு செய்கின்றன. சுருக்கமான மொழிநடையின் வழியாக நுட்பமான உணர்வுகளை வெளிப்படுத்தும் அவரது படைப்புகள், பெண்ணின் தனிப்பட்ட வாழ்வியல் அனுபவங்களையும் அவள் எதிர்கொள்ளும் குடும்ப மற்றும் சமூகச் சூழல்களையும் ஒருங்கிணைத்துப் பேசுகின்றன.

உமா மகேஸ்வரியின் சிறுகதைகளில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்கள் ஒரே இயல்புடையவர்களாக அமையவில்லை. சிலர் பிறரது உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் கடுமையாக நடந்துகொள்கின்றனர்; வேறு சிலர் அன்பு, தியாகம், பரிவு, இரக்கம், மனிதநேயம் ஆகிய பண்புகளின் வெளிப்பாடுகளாகத் திகழ்கின்றனர். *மணற்குமிழ்* சிறுகதையில் இடம்பெறும் ரத்னம்மாவும் *காணாத சிமிழ்* சிறுகதையில் இடம்பெறும் மாமியாரும் பிறரது வாழ்வில் துயரத்தையும் மனவேதனையையும் ஏற்படுத்தும் கதாபாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். அதேவேளையில், *முறிவு* சிறுகதையின் சுதா, *வயலட் ஜன்னல்* சிறுகதையின் அவந்திகா, *அம்ருதா* சிறுகதையின் அம்ருதா ஆகியோர் அன்பு, தியாகம், பரிவு ஆகிய பண்புகளின் சிறப்பை வெளிப்படுத்தும் கதாபாத்திரங்களாக அமைகின்றனர்.

இவ்வாறு மாறுபட்ட குணநலன்களைக் கொண்ட பெண் கதாபாத்திரங்களின் வழியாகப் பெண்களின் மனநிலைகள், குடும்ப உறவுகளின் சிக்கல்கள், மூடநம்பிக்கைகளால் ஏற்படும் பாதிப்புகள், பிறரது துயரத்தை உணரும் மனப்பாங்கு மற்றும் மனிதநேயத்தின் மேன்மை ஆகியவற்றை உமா மகேஸ்வரி வெளிப்படுத்துகிறார். இவ்வாய்வு, அவரது சிறுகதைகளில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்களின் குணநலன்களையும் செயல்பாடுகளையும் ஆராய்ந்து, அவற்றின் வழியாக வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகளையும் வாழ்வியல் கருத்துகளையும் எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிறுகதையில் பாத்திரப்படைப்பின் முக்கியத்துவம்

சிறுகதையில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் எத்தகைய இயல்புகளைக் கொண்டவர்களாக இருந்தாலும், அவர்களை

உயிரோட்டமுள்ளவர்களாகப் படைப்பது படைப்பாளரின் திறனைப் பொறுத்ததாகும். கதாபாத்திரங்களின் புறத்தோற்றம், நடத்தை, குணநலன்கள், மொழிநடை, செயல்பாடுகள் மற்றும் பெயர் ஆகியவை அவற்றின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இக்கூறுகள் கதையின் நிகழ்வுகளுக்கும் கதாபாத்திரங்களின் இயல்புகளுக்கும் பொருந்துமாறு அமைக்கப்படும்போது, அவை இயல்பான மனிதர்களைப் போன்ற நம்பகத்தன்மையைப் பெறுகின்றன. இதன்மூலம் கதாபாத்திரங்கள் கதையின் கருப்பொருளை வலுப்படுத்துவதுடன், படைப்பின் இலக்கியத் தரத்தையும் உயர்த்துகின்றன. இதனை விளக்கும் வகையில், **அ. ச. ஞானசம்பந்தன், *இலக்கியக் கலை* என்னும் நூலில், "சுருக்கமாகச் சொன்னால் கதை மாந்தர்கள் நாம் விருப்பு வெறுப்புக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும்" எனக் குறிப்பிடுகிறார்.**[1] இக்கருத்து, கதாபாத்திரங்கள் வெறும் நிகழ்வுகளை நகர்த்தும் கருவிகளாக இல்லாமல், அவற்றின் இயல்புகளாலும் செயல்பாடுகளாலும் தனித்துவம் பெற வேண்டும் என்பதை உணர்த்துகிறது. எனவே, சிறுகதையின் கருப்பொருளையும் படைப்பாளரின் வாழ்வியல் பார்வையையும் வெளிப்படுத்துவதில் பாத்திரப்படைப்பு இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

பெண் கதாபாத்திரங்கள்

உமா மகேஸ்வரி தம் படைப்புகளில் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை அதிகம் எடுத்துரைப்பவர். உன்னுடைய படைப்புகளில் வரக்கூடிய பெண் கதாபாத்திரங்கள் எல்லா பெண் கதாபாத்திரங்களுமே சிறந்த கதாபாத்திரங்கள் என்று கூற முடியாது. சில பெண் கதாபாத்திரங்கள் நல்ல குணம் கொண்டதாகவும் சில பெண் கதாபாத்திரங்கள் குணம் குன்றியதாகவும் அமையப்பெற்றிருக்கும். இதன் அடிப்படையில் பல பெண் கதாபாத்திரங்களை தன்னுடைய கதைகளில் புகுத்தியுள்ளார்.

1. **எதிர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரங்கள்**
2. **நேர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரங்கள்**

எதிர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரங்கள்

உமா மகேஸ்வரியின் சிறுகதைகளில் இடம்பெறும் சில பெண் கதாபாத்திரங்கள், பிறரது உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் நடந்துகொள்வதுடன், தங்களது பேச்சாலும் செயல்களாலும் பிறருக்கு மனவேதனையை ஏற்படுத்துகின்றனர். பண்பு, நடத்தை, பேச்சு ஆகியவற்றின் அடிப்படையில் பிறரது மனதைப் புண்படுத்தும் இத்தகைய கதாபாத்திரங்களை எதிர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரங்கள் என வகைப்படுத்தலாம். இவ்வகையில், *மணற்குமிழ்* சிறுகதையில் இடம்பெறும் ரஞ்சனியின் மாமியார் ரத்னம்மா, காணாத சிமிழ் சிறுகதையில் வரும் மாமியார், *மழை* சிறுகதையில் இடம்பெறும் ஈஸ்வரியின் அத்தை, *கதவு திறக்கும் கணம்* சிறுகதையில் வரும் மஞ்சுவின் அம்மா, *தொலைகடல்* சிறுகதையில் இடம்பெறும் நவீனாவின் அம்மா, *மோனா* சிறுகதையில் வரும் மோனாவின் அம்மா ஆகியோர் இவ்வகைப்பாட்டிற்கு உரியவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இக்கதாபாத்திரங்களின் வழியாகப் பெண்களுக்கு இடையிலான உறவுகளில் வெளிப்படும் முரண்பாடுகளையும், குடும்பச் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் மனத்துயரங்களையும் உமா மகேஸ்வரி எடுத்துரைக்கிறார்.

ரஞ்சனியின் மாமியார் ரத்னம்மா

இளங்கோவடிகள் இயற்றிய *சிலப்பதிகாரத்தில்* பிறரைப் பற்றிப் புறங்கூறுதல், பழித்துரைத்தல் போன்ற செயல்கள் சமூக உறவுகளில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பற்றிய செய்திகளைக் காண முடிகிறது. இத்தகைய இலக்கியப் பின்னணியில், பிறரது துயரத்தை உணராமல்

அவர்களைப் பழித்துரைக்கும் மனப்போக்கை உமா மகேஸ்வரியின் *மணற்குமிழ்* சிறுகதையில் இடம்பெறும் ரத்னம்மாவின் கதாபாத்திரத்துடன் ஒப்பிட்டு ஆராயலாம். கணவனை இழந்த ரஞ்சனியின் துயரத்தைப் புரிந்துகொள்ளாமல், அவளது ஜாதகத்தைக் காரணமாகக் காட்டி ரத்னம்மா பழிசுமத்துவது, பிறரது துன்பத்தை மேலும் அதிகரிக்கும் உணர்வற்ற அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது. உமா மகேஸ்வரியின் *மணற்குமிழ்* சிறுகதையில் ரஞ்சனியின் மாமியார் ரத்னம்மா எதிர்மறைப் பண்புகளைக் கொண்ட பெண் கதாபாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார். ரஞ்சனிக்குத் திருமணமாகி மூன்று மாதங்களே ஆன நிலையில், அவளது கணவர் எதிர்பாராத விதமாக விபத்தில் உயிரிழக்கிறார். கணவனை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் ரஞ்சனிக்கு ஆறுதல் கூற வேண்டிய ரத்னம்மா, அவளது மனநிலையைப் புரிந்துகொள்ளாமல் கடுமையான சொற்களால் இழிவுபடுத்துகிறாள். இதனைப் பின்வரும் கூற்றின் வழியாக அறியலாம்.

> **“பண்பில வாகி தான்வயின் பிழைப்பின்**
>
> **அன்பில வாகும் கடுஞ்சொல் கிளவி”**[2]

— *தொல்காப்பியம்*, பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், நூற்பா 259 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கூற்றின் பொருளாக, பண்பின்மையும் அன்பின்மையும் கொண்டவர்களின் கடுஞ்சொற்கள் பிறரது மனத்தைப் புண்படுத்தும் தன்மை உடையவை எனக் கொள்ளலாம். இக்கருத்திற்கு எடுத்துக்காட்டாக ரத்னம்மாவின் பேச்சு அமைகிறது. அவள் ரஞ்சனியை, “**மூதேவி பீடை வந்து மூணு மாசம் முடியல ஒத்தைக்கு ஒரு பிள்ளையை பாட ஏத்திட்டு போற பாரு சனியன் திருவானைக்கா ஜோசியன் சொன்னது நான் நம்பலியே. இவ ஜாதக சரி வராதுன்னு கோடி காட்டினானே அப்பவே**

கேட்கலையே சிவப்பு தோலை பார்த்து மயங்கிட்டேனே. வீட்டு விளக்க அவிக்க வந்து தொலைஞ்சாளே”3

(மணற்குமிழ், உமா மகேஸ்வரி கதைகள், ***ப. 280.)*** என்று இழிவுபடுத்திப் பேசுகிறாள். இக்கூற்றில், தன் மகனின் இறப்பிற்குக் காரணம் ரஞ்சனியின் ஜாதகப் பொருத்தமின்மையே என்று ரத்னம்மா கருதுவது வெளிப்படுகிறது. மகனை இழந்த துயரத்தில் அவள் இருப்பினும், கணவனை இழந்து ஆதரவற்ற நிலையில் நிற்கும் மருமகளின் துயரத்தை உணரத் தவறுகிறாள். மேலும், அவளது எதிர்கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காமல் பழிசுமத்தும் வகையில் பேசுகிறாள். இச்செயல் ரத்னம்மாவின் கடுமையான மனப்போக்கையும் பிறரது உணர்வுகளை மதிக்காத தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

கடுஞ்சொற்கள் ஒருவரது மனத்தில் நீண்டகாலம் நிலைத்திருக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்பதைத் திருவள்ளுவர்,

> **“தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
>
> **நாவினாற் சுட்ட வடு.”**[4]

— *திருக்குறள்*, குறள் 129. என்று குறிப்பிடுகிறார். தீயினால் ஏற்படும் உடற்காயம் காலப்போக்கில் ஆறிவிடலாம்; ஆனால் கடுஞ்சொற்களால் மனத்தில் ஏற்படும் காயம் எளிதில் மறைவதில்லை. இக்குறள் உணர்த்தும் கருத்திற்கு ஏற்ப, ரத்னம்மாவின் சொற்கள் ரஞ்சனியின் துயரத்தைத் தணிப்பதற்குப் பதிலாக, அவளது மனவேதனையை மேலும் ஆழப்படுத்துகின்றன. எனவே, ரத்னம்மாவின் பேச்சு அன்பின்மையையும் பிறரது உணர்வுகளை மதிக்காத மனப்போக்கையும் வெளிப்படுத்துகிறது. இச்சிறுகதையின் வழியாக, எதிர்பாராத துயர நிகழ்வுகளுக்குக் காரணம் தேடும்

மனிதர்கள், அவற்றை மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் அணுகும்போது எவ்வாறு பிறருக்குத் துன்பத்தை ஏற்படுத்துகின்றனர் என்பது புலப்படுகிறது. குறிப்பாக, ஜாதகத்தின் மீது கொண்டுள்ள கண்மூடித்தனமான நம்பிக்கையால் எவ்விதத் தவறும் செய்யாத ரஞ்சனி குற்றவாளியாகக் கருதப்படுகிறாள். ஏற்கெனவே கணவனை இழந்த துயரத்தில் இருக்கும் அவளுக்கு, ரத்னம்மாவின் சொற்கள் கூடுதல் மனவேதனையை ஏற்படுத்துகின்றன. இதன் மூலம், மூடநம்பிக்கைகளும் குடும்ப உறவுகளில் நிலவும் உணர்வற்ற அணுகுமுறையும் பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்புகளை உமா மகேஸ்வரி சுட்டிக்காட்டுகிறார்.

காணாத சிமிழ் சிறுகதையில் வரும் மாமியார்

உமா மகேஸ்வரியின் *காணாத சிமிழ்* சிறுகதையில் இடம்பெறும் மாமியார், மருமகளின் உணர்வுகளையும் வாழ்வியல் தேவைகளையும் புரிந்துகொள்ளாத எதிர்மறைப் பண்புடைய கதாபாத்திரமாக விளங்குகிறாள். தொலைந்துபோன சிமிழைக் கண்டுபிடித்தால் மட்டுமே மருமகள் தன் கணவனுடன் இணைந்து வாழ முடியும் என்றும், அப்போதுதான் பிறக்கும் குழந்தை ஆரோக்கியமாகவும் அறிவுடையதாகவும் இருக்கும் என்றும் மாமியார் கூறுகிறாள். இதனால், மருமகள் தொலைந்துபோன சிமிழைத் தேடுவதிலேயே தனது காலத்தைக் கழிக்கிறாள். நாள்கள் மாதங்களாகவும், மாதங்கள் ஆண்டுகளாகவும் கடந்தும் அவளால் சிமிழைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இச்சூழலில் அவள் அனுபவிக்கும் துயரத்தைப் பின்வரும் கூற்று வெளிப்படுத்துகிறது. “**சிமிழைத் தேடு தேடுன்னு அந்த சின்னப் பொண்ண வாழ விடாமலேயே அழிச்சுட்டா மாமியாக்காரி. அவளும் பொறுமைசாலி கொஞ்ச நஞ்ச வருஷமா காத்திருந்தா தாலி கட்டியும் கண்ணிகழியாம எவனையும் நினைக்காம தூக்கத்திலேயே உயிரவிட்ட ஒரு நா மகராசி அவள**

பெத்த தாய்க் குமுறி அழுது அழுகையிருக்கே மகளுக்கு சமாதி கட்டி முகம் செதுக்கி வச்சுக் கும்பிட்டா”5 (***காணாத சிமிழ்***, ***உமா மகேஸ்வரி கதைகள்***, **ப.** 243.) இக்கூற்றின் வழியாக, மாமியார் விதித்த நிபந்தனையால் இளம்பெண்ணின் வாழ்க்கை எவ்வாறு சிதைவடைகிறது என்பதை அறிய முடிகிறது. மருமகளின் மனநிலையைப் புரிந்துகொண்டு அவளுக்கு ஆதரவளிக்க வேண்டிய மாமியார், சிமிழைக் கண்டுபிடிப்பதை அவளது வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி, அவளைத் தொடர்ந்து தேடச் செய்கிறாள். இதனால், அவளது இயல்பான வாழ்க்கையும் குடும்ப உறவும் பாதிக்கப்படுகின்றன. இறுதியில், அந்தப் பெண் திருமண வாழ்க்கையின் மகிழ்ச்சிகளை அனுபவிக்க முடியாமலேயே உயிரிழக்கும் துயரநிலையை இக்கதை எடுத்துரைக்கிறது.

மூத்தவர்கள் இளையவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய நிலையில், இக்கதையில் இடம்பெறும் மாமியார் தனது மூடநம்பிக்கையை மருமகளின் மீது திணிக்கிறாள். தொல்காப்பியத்தில் இடம்பெறும் “கிழவோள் செப்பல் கிழவிக்கு உரித்தே” என்ற நூற்பா, குறிப்பிட்ட இலக்கியச் சூழலில் மூத்த பெண்ணின் கூற்றுரிமையைச் சுட்டுகிறது. இதனை நேரடியாக மாமியார்–மருமகள் உறவுக்கான அறநெறியாகப் பொருள்கொள்ளாமல், மூத்த பெண்ணின் வழிகாட்டும் பங்கு குறித்த பரந்த கருத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இச்சிறுகதையில், வழிகாட்ட வேண்டிய மூத்த பெண், மருமகளின் நலனைப் புறக்கணித்து அவளது வாழ்வைத் துயரத்திற்கு உள்ளாக்குகிறாள். இதன் மூலம், குடும்பத்தில் வயது மற்றும் அதிகாரத்தின் அடிப்படையில் உருவாகும் கட்டுப்பாடுகள் மனிதநேயத்துடன் அமையாவிட்டால் அவை பிறரது வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதை உணர முடிகிறது.

மேலும், கணவனுடன் இணைந்து வாழ்வதற்கும் எதிர்காலக் குழந்தையின் நலத்திற்கும் தொலைந்துபோன ஒரு பொருளைக் கண்டுபிடிப்பதை நிபந்தனையாக விதிப்பது, பகுத்தறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கைகளின் ஆதிக்கத்தை வெளிப்படுத்துகிறது. இத்தகைய அணுகுமுறை பெண்ணின் தனிப்பட்ட விருப்பங்களையும் உணர்வுகளையும் புறக்கணிப்பதுடன், அவளது வாழ்க்கையின் மீதான பிறரது கட்டுப்பாட்டையும் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம், குடும்ப உறவுகளில் நிலவும் அதிகார மனப்பான்மையும் மூடநம்பிக்கைகளும் பெண்களின் வாழ்க்கையை எவ்வாறு துயரத்திற்கு உள்ளாக்குகின்றன என்பதை உமா மகேஸ்வரி சித்தரித்துள்ளார்.

எனவே, மணற்குமிழ், காணாத சிமிழ் ஆகிய இரு சிறுகதைகளிலும் இடம்பெறும் ரத்னம்மா மற்றும் மாமியார் ஆகிய கதாபாத்திரங்கள், பிறரது உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத மனப்போக்கையும் மூடநம்பிக்கைகளின் தாக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. *மணற்குமிழ்* சிறுகதையில் ரத்னம்மா, கணவனை இழந்த மருமகளுக்கு ஆறுதல் அளிக்காமல், அவளது ஜாதகத்தைக் காரணமாகக் காட்டிப் பழிசுமத்துகிறாள். *காணாத சிமிழ்* சிறுகதையில் இடம்பெறும் மாமியார், தனது மூடநம்பிக்கையை மருமகளின் மீது திணித்து அவளது திருமண வாழ்க்கையையே பாதிக்கிறாள். இவ்விரு கதாபாத்திரங்களின் வழியாக, பெண்களின் துயரத்தை மேலும் அதிகரிக்கும் குடும்பச் சூழல்களையும், மனித உறவுகளில் பரிவும் புரிதலும் இல்லாதபோது ஏற்படும் விளைவுகளையும் உமா மகேஸ்வரி நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். இவ்வகையில், எதிர்மறைப் பண்புகளைக் கொண்ட பெண் கதாபாத்திரங்கள் தனிமனிதப் பண்புக் குறைபாடுகளை மட்டுமல்லாமல், குடும்ப அமைப்பில் நிலவும் மூடநம்பிக்கைகள், அதிகார மனப்பான்மை மற்றும் உணர்வற்ற அணுகுமுறைகள்

ஆகியவற்றையும் வெளிப்படுத்தும் இலக்கியப் படைப்புகளாக அமைகின்றன.

நேர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரங்கள்

உமா மகேஸ்வரியின் சிறுகதைகளில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்கள் பல்வேறு குணநலன்களுடன் படைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அன்பு, தியாகம், இரக்கம், பிறரது துயரத்தை உணர்தல், உதவும் மனப்பான்மை ஆகிய உயரிய பண்புகளைக் கொண்ட கதாபாத்திரங்கள் குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன. *முறிவு* சிறுகதையில் வரும் சுதா, *வயலட் ஜன்னல்* சிறுகதையில் இடம்பெறும் அவந்திகா, *அம்ருதா* சிறுகதையின் அம்ருதா ஆகியோருடன் *கதவு திறக்கும் கணம்* சிறுகதையின் மாலதி, *மடை* சிறுகதையின் சின்னக்கா ஆகியோரும் இவ்வகையில் குறிப்பிடத்தக்க பெண் கதாபாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இக்கதாபாத்திரங்களின் செயல்பாடுகள் வழியாகப் பெண்களின் மனிதநேயப் பண்புகளையும் குடும்ப உறவுகளில் வெளிப்படும் பொறுப்புணர்வையும் உமா மகேஸ்வரி வெளிப்படுத்துகிறார்.

சுதா

உமா மகேஸ்வரியின் *முறிவு* சிறுகதையில் சுதா முதன்மைப் பெண் கதாபாத்திரமாக இடம்பெறுகிறாள். வசதியான குடும்பத்தில் திருமணம் செய்துகொண்டு கணவனுடன் மகிழ்ச்சியாக வாழும் சுதாவின் பிறந்த வீட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. அவளுடைய இரண்டு தங்கைகளும் திருமண வயதை அடைந்துள்ள நிலையில், குடும்பத்தின் பொருளாதாரச் சூழல் அவர்களின் திருமணத்திற்கு இடையூறாக அமைகிறது. இதனைத் தாயின் கூற்றிலிருந்து அறிய முடிகிறது. “**நல்ல நல்ல இடத்திலிருந்து வரன் வருகிறது அப்பாவுக்கு வியாபாரஞ் சரியில்ல கழுத்தில் கிடக்கிற**

சின்ன செயினும் காது வளையத்தின் தவிர ரெண்டு பேத்துக்கும் வேற நகையில்லை"6 (*முறிவு*, உமா மகேஸ்வரி கதைகள், ப. 521) தாயின் இக்கூற்று, தங்கைகளின் திருமணத்தை நடத்துவதில் குடும்பம் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சிக்கலை வெளிப்படுத்துகிறது. **இதனை தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இல்லறச் சிறப்பு மற்றும் கிளையோரைத் தாங்கும் பண்பு குறித்துக் குறிப்பிடுகையில், சுற்றத்தைத் தழுவி வாழும் இயல்பு வலியுறுத்தப்படுகிறது. "சுற்றம் ஓம்பல் இழிவன்று"7 (தொல்காப்பியம் பொருளதிகாரம் 4- வது இயல் நூற்பா எண் 11)** சுதா, தான் வசதியாக வாழ்வதை மட்டும் கருத்தில் கொள்ளாமல், தன் தங்கைகளின் எதிர்காலத்திற்கும் துணைநிற்க வேண்டும் என்று எண்ணுகிறாள். இதன் காரணமாக, கணவன் தனக்குப் பரிசளித்த நகைகளைத் தன் தாயிடம் வழங்கி, தங்கைகளின் திருமணத்திற்குத் தேவையான உதவியைச் செய்கிறாள். இதனைப் பின்வரும் நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. **"தன் கைப்பையைத் திறந்து சிவப்புக்கல் இலையும் போகும் விருந்த நெக்லஸ் எடுத்து அம்மாவிடம் கொடுத்தாள் கூடவே நீலக்கல் ஜிமிக்கிகளும் இருந்தன. உன்நகை எங்கே என்று கேட்டால் என்ன செய்வ? நான் டிசைன் மாற்றிக்கிறேன் இவர் எனக்கு தரும் பணத்தில் இரந்து வாங்கிக்கிறேன் இதேபோல் ஒவ்வொரு முறை அங்கு போகும்போதும் கவர்னர் மாலை கல் வளையல்கள் அட்டிகை என்று அவளுக்குப் போட்டதையெல்லாமும் அதற்கு மேலும் கொண்டு கொடுத்துவிட்டு அவ்வப்போது இவர் தரும் பணத்தை தனக்கு வாங்கிக் கொண்டு விட்டாள்"8 (*முறிவு*, உமா மகேஸ்வரி கதைகள், ப. 521)** இந்நிகழ்வில், சுதா தனது தங்கைகளின் நலனுக்காகத் தன்னிடம் உள்ள பொருள்களைத் தியாகம் செய்யத் தயங்காதவளாக விளங்குகிறாள். கணவன் தனக்கு வழங்கிய நகைகளைப் பிறந்த வீட்டின் தேவைக்காக வழங்குவது அவளது குடும்பப் பாசத்தையும் தியாக மனப்பான்மையையும் வெளிப்படுத்துகிறது. தனது வாழ்க்கை வசதியாக அமைந்துவிட்டது என்பதற்காகப் பிறந்த வீட்டின்

துயரத்தைப் புறக்கணிக்காமல், தங்கைகளின் எதிர்காலத்திற்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்கிறாள்.

இன்றைய சமூகத்தில் சொத்துப் பகிர்வு மற்றும் பொருளாதார நலன்கள் காரணமாக உடன்பிறப்புகளிடையே முரண்பாடுகள் ஏற்படுவதைக் காணமுடிகிறது. இத்தகைய சூழலில், சுதாவின் செயல்பாடு உடன்பிறப்புகளின் மீதான அன்பையும் பொறுப்புணர்வையும் எடுத்துக்காட்டுகிறது. தன்னுடைய நலனை மட்டுமே முன்னிறுத்தாமல், பிறரது நலனையும் கருத்தில் கொண்டு செயல்படும் சுதா, நேர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரமாக விளங்குகிறாள்.

அவந்திகா

உமா மகேஸ்வரியின் வயலட் ஜன்னல் சிறுகதையில் இடம்பெறும் அவந்திகா, பிறரது சூழ்நிலையைப் புரிந்துகொண்டு உதவும் மனப்பான்மை கொண்ட பெண் கதாபாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளாள். அவள் தன் பெரியப்பாவுடன் தொடர்வண்டியில் பயணம் செய்யும்போது, கணவன், மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தைச் சந்திக்கிறாள். அக்குடும்பத்தின் குழந்தையான ஸ்ரேயா, தன்னுடன் விளையாடுமாறு பெற்றோரிடம் தொடர்ந்து கேட்கிறாள். ஆனால், கைக்குழந்தையைப் பராமரித்துக்கொண்டிருக்கும் தாய் சாக்ஷியால் அவளுடன் விளையாட இயலவில்லை. இதனை உணர்ந்த அவந்திகா, ஸ்ரேயாவை அன்புடன் அழைத்து அவளுடன் விளையாடத் தொடங்குகிறாள். இந்நிகழ்வைப் பின்வரும் பகுதி எடுத்துரைக்கிறது. **“பாம்பு கட்டத்தில் பலமுறை ஸ்ரேயாவை ஜெயிக்க விட அவள் தோற்றால் அவளிடம் தோற்பது பேரானந்தமாக இருந்தது அவள் அம்மா சாக்ஷி கைக்குழந்தை தூங்கவும் அவளும் கண்ணசந்தி ருந்தாள். ஸ்....ஸ்..... என்ற உதட்டின்**

மீது கை வைத்து எச்சரித்தாள். ஸ்ரேயாவால் பேசாத இருக்க முடியாததால் அவள் ஸ்ரேயாவை காலியாக இருந்த வேறு இருக்கைக்கு கூட்டிப் போனால் சாக்ஷி நன்றாக தூங்கினாள் ஸ்ரேயாவும் அவந்திகாவும் நன்றாக சந்தோஷமாக விளையாடினார்கள்”9 (வயலட் ஜன்னல், உமா மகேஸ்வரி கதைகள், பக். 544–545) இந்நிகழ்வில், அவந்திகா ஸ்ரேயாவுடன் விளையாடுவதோடு மட்டுமல்லாமல், கைக்குழந்தையைப் பராமரிப்பதில் சிரமப்படும் சாக்ஷியின் நிலையையும் புரிந்துகொள்கிறாள். சாக்ஷி ஓய்வெடுப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் ஸ்ரேயாவை வேறொரு இருக்கைக்கு அழைத்துச் சென்று விளையாடுகிறாள். இதன் மூலம், பிறரது தேவைகளை உணர்ந்து செயல்படும் அவந்திகாவின் பரிவும் உதவும் மனப்பான்மையும் வெளிப்படுகின்றன.

தனது பயணத்தையும் தனிப்பட்ட விருப்பங்களையும் மட்டுமே கருத்தில் கொள்ளாமல், தன்னுடன் பயணிக்கும் மற்றொரு குடும்பத்தின் சூழ்நிலையையும் புரிந்துகொண்டு செயல்படுவது அவந்திகாவின் சிறப்பாகும். குழந்தையின் இயல்பான தேவையையும் தாயின் ஓய்வுத் தேவையையும் ஒருசேர உணர்ந்து அவள் செயல்படுகிறாள். இத்தகைய அணுகுமுறை, பிறரது உணர்வுகளை மதித்தல் மற்றும் அன்றாட வாழ்வில் மனிதநேயத்துடன் நடந்துகொள்ளுதல் ஆகிய பண்புகளை வெளிப்படுத்துகிறது. எனவே, அவந்திகா பிறருக்கு உதவும் மனப்பான்மையும் பரிவும் கொண்ட பெண் கதாபாத்திரமாக விளங்குகிறாள்.

அம்ருதா

உமா மகேஸ்வரியின் *அம்ருதா* சிறுகதையில் இடம்பெறும் அம்ருதா, தாய்மையின் எல்லைகளைக் கடந்து மனிதநேயத்தை

வெளிப்படுத்தும் பெண் கதாபாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளாள். வடமாநிலத்தைச் சேர்ந்த அம்ருதா, சுகந்தியின் வீட்டில் பணிபுரிகிறாள். அவளுக்கும் கைக்குழந்தை இருக்கிறது. சுகந்திக்குத் தாய்ப்பால் சுரக்காத காரணத்தால், அவளுடைய குழந்தை பசியால் அழுகிறது. குழந்தைக்குப் புட்டிப்பால் கொடுக்க முயன்றபோதும், அது பாலை ஏற்காமல் துப்பிவிடுகிறது. இதனைப் பின்வரும் நிகழ்வு எடுத்துரைக்கிறது. “**செல்லம் வேணாண்டா செல்லம் அழாதே ராஜா அவன் தலையைக் கோதி இடது தொடையை ஆட்டிக்கொண்டே பால் பாட்டிலின் ரப்பரை வாயிலிட்டாள். அவன் வேப்பங்காய் போல் அதை துப்பித் தள்ளினான்”10 (அம்ருதா**, **உமா மகேஸ்வரி கதைகள்**, **ப. 313)** பசியால் தவிக்கும் குழந்தையை அமைதிப்படுத்த சுகந்தி முயன்றபோதும், குழந்தை புட்டிப்பாலை ஏற்க மறுக்கிறது. ஒருநாள் சுகந்தி அசதியால் உறங்கிவிடுகிறாள். அப்போது குழந்தையின் பசியையும் அதன் துயரத்தையும் உணர்ந்த அம்ருதா, அக்குழந்தையைத் தூக்கிச் சென்று தாய்ப்பால் ஊட்டுகிறாள். இந்நிகழ்வு அவளது தாய்மை உணர்வையும் அளவற்ற பரிவையும் வெளிப்படுத்துகிறது. **“அமிர்தா அடுப்புச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். இடது காலை குத்தவைத்து வலது காலை நீட்டி அவள் மடியில் குழந்தை இருந்தான். திறந்திருந்த அவள் இடது மார்பில் குழந்தையின் பின்னங்களை அழிந்து இருந்தது அவள் உறிஞ்சும் சத்தம் சாகமுற்ற பறவைகள் ஆற்றில் நீர் அருந்துவது போல”[11] (*அம்ருதா*, உமா மகேஸ்வரி கதைகள்**, **ப. 315)** இக்காட்சியில், தாய்ப்பாலுக்காக ஏங்கும் குழந்தையின் பசியைப் போக்குவதற்காக அம்ருதா மேற்கொள்ளும் செயல் அவளது ஆழமான மனிதநேயத்தை வெளிப்படுத்துகிறது. அக்குழந்தை தன்னுடைய குழந்தை அல்ல என்ற வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளாமல், அதன் தேவையை உணர்ந்து செயல்படுகிறாள். குழந்தையின் பசியைப் போக்குவதே முதன்மையானது என்ற மனப்பான்மையுடன் அவள் நடந்துகொள்வது

தாய்மை என்பது ஈன்றெடுத்த உறவுடன் மட்டுமே வரையறுக்கப்படுவதில்லை என்பதை உணர்த்துகிறது.

அம்ருதாவின் செயல், பிற உயிர்களின் துயரத்தை உணர்ந்து அவற்றைப் போக்க முனையும் உயரிய பண்பின் வெளிப்பாடாகும். சமூக மற்றும் பணிநிலை வேறுபாடுகளைக் கடந்து, ஒரு குழந்தையின் அடிப்படைத் தேவையை நிறைவேற்ற முன்வரும் அவளது செயல் அன்பு, இரக்கம், பரிவு ஆகியவற்றின் மேன்மையை எடுத்துரைக்கிறது. எனவே, அம்ருதா தாய்மை உணர்வையும் மனிதநேயத்தையும் ஒருங்கே வெளிப்படுத்தும் குறிப்பிடத்தக்க பெண் கதாபாத்திரமாகத் திகழ்கிறாள்.

சுதா, அவந்திகா, அம்ருதா ஆகிய பெண் கதாபாத்திரங்களின் செயல்பாடுகள் வழியாக, உமா மகேஸ்வரி அன்பு, தியாகம், பரிவு, பொறுப்புணர்வு, மனிதநேயம் ஆகிய உயரிய பண்புகளை வெளிப்படுத்தியுள்ளார். சுதா உடன்பிறப்புகளின் நலனுக்காகத் தியாகம் செய்கிறாள்; அவந்திகா பிறரது சிரமத்தை உணர்ந்து உதவுகிறாள்; அம்ருதா தாய்ப்பாலுக்காக ஏங்கும் குழந்தையின் பசியைப் போக்குகிறாள். இவ்வாறு ஒவ்வொரு கதாபாத்திரமும் வெவ்வேறு சூழல்களில் மனிதநேயத்தின் தனித்துவமான பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம், தனிமனித நலனைத் தாண்டிப் பிறரது துயரத்தையும் தேவையையும் உணர்ந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை உமா மகேஸ்வரி தமது சிறுகதைகளில் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார்.

முடிவுரை

உமா மகேஸ்வரியின் சிறுகதைகளில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்கள் பல்வேறு குணநலன்களுடனும் வாழ்வியல் அனுபவங்களுடனும் படைக்கப்பட்டுள்ளன என்பதை இவ்வாய்வு

நிறுவுகிறது. பெண்களின் அக உணர்வுகள், குடும்ப உறவுகளில் நிலவும் முரண்பாடுகள், சமூகக் கட்டுப்பாடுகள், மூடநம்பிக்கைகளின் தாக்கம் மற்றும் மனிதநேயப் பண்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதில் அவரது பாத்திரப்படைப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது.

எதிர்மறைப் பண்புகள் கொண்ட பெண் கதாபாத்திரங்களின் வழியாகக் குடும்ப உறவுகளில் நிலவும் அதிகார மனப்பான்மை, பிறரது துயரத்தைப் புரிந்துகொள்ளாத போக்கு, மூடநம்பிக்கைகள் மற்றும் அவற்றால் பெண்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகள் ஆகியவை வெளிப்படுகின்றன. குறிப்பாக, *மணற்குமிழ்* சிறுகதையில் இடம்பெறும் ரத்னம்மாவின் செயல்பாடுகள், கணவனை இழந்த பெண்ணின் துயரத்தைப் புரிந்துகொள்ளாமல், அவளைக் குற்றம் சுமத்தும் மனப்போக்கை வெளிப்படுத்துகின்றன. *காணாத சிமிழ்* சிறுகதையில் இடம்பெறும் மாமியாரின் அணுகுமுறை, குடும்ப அதிகாரமும் மூடநம்பிக்கையும் இணைந்து ஒரு பெண்ணின் வாழ்வுரிமையையும் மனநலத்தையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை எடுத்துரைக்கிறது.

இதற்கு மாறாக, *முறிவு* சிறுகதையின் சுதா, *வயலட் ஜன்னல்* சிறுகதையின் அவந்திகா, *அம்ருதா* சிறுகதையின் அம்ருதா ஆகியோர் அன்பு, தியாகம், பரிவு, இரக்கம், மனிதநேயம் ஆகிய பண்புகளின் வெளிப்பாடுகளாக அமைகின்றனர். தங்கைகளின் திருமணத்திற்காகத் தனது நகைகளை வழங்கும் சுதாவின் செயல், உடன்பிறப்புகளின் மீதான அன்பையும் குடும்பப் பொறுப்புணர்வையும் வெளிப்படுத்துகிறது. மற்றொரு குழந்தையுடன் அன்பாகப் பழகி, அதன் தாயின் சிரமத்தைக் குறைக்கும் அவந்திகாவின் செயல்பாடு, பிறரது சூழலைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவத்தையும் உதவும் மனப்பான்மையையும் புலப்படுத்துகிறது. தாய்ப்பாலுக்காக ஏங்கும் மற்றொரு குழந்தையின்

பசியைப் போக்கும் அம்ருதாவின் செயல், தாய்மை என்பது ஈன்றெடுத்த உறவைத் தாண்டியும் பரிவு மற்றும் மனிதநேயத்தின் அடிப்படையில் வெளிப்படக்கூடியது என்பதை உணர்த்துகிறது.

இவ்வாய்வின் வழியாக, உமா மகேஸ்வரியின் பெண் கதாபாத்திரங்கள் நல்லவர், தீயவர் என்ற இருமை வகைப்பாட்டிற்குள் மட்டும் அடங்கிவிடாமல், குடும்பம், சமூகம், பண்பாடு ஆகியவற்றின் தாக்கங்களுக்கு உட்பட்ட மனிதர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்பது புலப்படுகிறது. அவர்களின் குணநலன்களும் செயல்பாடுகளும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள், குடும்ப உறவுகளின் முரண்பாடுகள், சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் மனிதநேயத்தின் அவசியம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, எதிர்மறைப் பாத்திரங்கள் பெண்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளையும் உறவுச் சிக்கல்களையும் சுட்டிக்காட்டுகின்றன; நேர்மறைப் பாத்திரங்கள் அன்பு, தியாகம், பரிவு ஆகியவற்றின் வழியாக மனித உறவுகளின் மேன்மையை எடுத்துரைக்கின்றன.

எனவே, பெண் கதாபாத்திரங்களின் வழியாகப் பெண்களின் உணர்வுலகையும் குடும்ப உறவுகளின் சிக்கல்களையும் சமூக வாழ்வியலையும் நுட்பமாகப் பதிவுசெய்வதில் உமா மகேஸ்வரியின் சிறுகதைகள் குறிப்பிடத்தக்க இலக்கியப் பங்களிப்பை வழங்குகின்றன என இவ்வாய்வு முடிவுசெய்கிறது.

அடிக்குறிப்புகள்

1. ஞானசம்பந்தன் அ.ச - இலக்கியக் கலை ப. **370**
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், நூற்பா 259
3. மணற்குமிழ் - உமா மகேஸ்வரி கதைகள் ப.280

4. திருக்குறள், குறள் 129.
5. காணாத சிமிழ் - உமா மகேஸ்வரி கதைகள் ப. 243
6. முறிவு - உமா மகேஸ்வரி கதைகள் ப.521
7. தொல்காப்பியம் பொருளதிகாரம் 4- வது இயல் நூற்பா எண் - 11
8. முறிவு - உமா மகேஸ்வரி கதைகள் ப.521
9. வயலட் ஜன்னல் - உமா மகேஸ்வரி கதைகள் பக். 544,545
10. உமா மகேஸ்வரி .., உமா மகேஸ்வரி கதைகள் அம்ருதா ப. 313
11. உமா மகேஸ்வரி .., உமா மகேஸ்வரி கதைகள் அம்ருதா ப. 315

துணை நின்ற நூல்கள்

1. இலக்கியக் கலை ஞானசம்பந்தன்.அ.ச. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் திருநெல்வேலி 1953 கழக வெளியீடு

2. உமா மகேஸ்வரி கதைகள் வம்சி புக்ஸ் 19.டி.எம்.சாரோன் திருவண்ணாமலை டிசம்பர் 2021

3. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்புரணர் உரை தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

4. திருக்குறள் கலைஞர் உரை சென்னை